[1979 பிப்ரவரி 19

திரு. என். கிட்டப்பா : தற்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையையொட்டிய நூலகத்தில் போதுமான இடம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும், எனவே புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற இந்தக் கட்டடத்தில் அந்த நூலகம் சிறப்பான முறையில் அமையத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கட்டடம் தலைமைச் செயலகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடம். சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக, அவர்களின் வசதிக்காக ரூ. 1, 30, 000 செலவில் வேறு ஒரு திட்டம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. துரை முத்துசாமி : அசெம்பளி டிப்பார்மென்ட்டுக்காக ரூ. 1, 30, 000 செலவிடப்படவிருப்பதாகச் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அந்தத் தொகை போதாது என்று கருதுகிறேன். எனவே அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்தவகையில் போதாது என்று கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. ரூ. 1,30,000 என்பது போதுமானது.

திரு. து. இராமசாமி : தலைமைச் செயலகத்திற்கு என்று கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடத்திற்கு பூர்ணமாக மாற்றப்படவில்லை என்று கருதுகிறேன். இந்தக் கட்டடத்தில் உள்ள செகரட்டரிகள், மற்றவர்களை அந்தக் கட்டடத்திற்கு மாற்றினால் இந்தக் கட்டடம் சட்டசபை அலுவலக அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு கட்டடமும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

*வினா எண். 100 —ஆ திரு. பொ. விஜயராகவன், திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தலைமைச் செயலகத்தில் மதிய உணவுக்கான தரம் வாய்ந்த உணவு விடுதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) தலைமைச் செயலகத்தில் மதிய உணவுக்கான தரம் வாய்ந்த உணவு விடுதிகள் உள்ளன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தரம் வாய்ந்த உணவு என்பதைவிட, இப்போது நெல்லின் விலை குறைந்திருக்கிற நேரத்தில் சாப்பாடு ஒன்று ரூ. 3 என்று விற்கப்படுகிறது; அதைக் குறைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாப்பாடு என்றால் அதில் பல ஐட்டங்கள் அடங்குகின்றன. எத்தகைய சாப்பாட்டை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : தரமான உணவு விடுதிகள் இங்கே இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சரான பிறகு அவர்கள் அங்கே சாப்பிட்டதில்லை என்று கருதுகிறேன். தரமான உணவு விடுதியாக உண்மையிலேயே இல்லை. அவை நல்லமுறையில் அமைய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் நான்-வெஜிட்டேரியன் மீல்ஸ் பற்றுக் கேட்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : இரண்டையும் சேர்த்துத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இங்குள்ள உணவு விடுதியில் சாப்பிடுகிற பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறமாதிரி தரம் குறைந்ததாக எனக்குத் தகவல் இல்லை. இங்கே பல்வேறு தனியார் துறையினரும், அதேபோல் தலைமைச் செயலக ஊழியர்கள் நடத்தும் கூட்டுறவு உணவு விடுதியில் இந்த உணவு வகைகளை வழங்கி வருகின்றனர். இது வரை தரமாகத்தான் தந்துவருகிறார்கள் என்பதுதான் நிலைமை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கு அந்த அனுபவம் ஏற்படவில்லை என்று சொன்னார்கள். அனுபவிக்கக்கூடிய நாங்கள் அதைப்பற்றி நன்கு அறிவோம். எனவே, இந்தத் தலைமைச் செயலகத்தில் மதிய உணவு ஏற்பாடு செய்வதை நமது அரசாங்கமே முன்நின்று அதை ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா? அதேபோல், நமது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் உணவு விடுதியில் தரம்....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் அதைப்பற்றிச் சொல்லக் கூட முடியவில்லை. ஆனால், இந்தச் தலைமைச் செயலகத்திலே கிட்டத்தட்ட 7 உணவுவிடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

(1) இந்தியா காப்பி வாரியம் நடத்தும் சிற்றுண்டி சாலை.

(2) தலைமைச் செயலக ஊழியர்கள் நடத்தும் கூட்டுறவு உணவு விடுதி.

(3) தனியார் துறையில் தர்பார் ஓட்டல் என்னும் பெயரில் இயங்கும் உணவு விடுதி.

(4) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படும் கோழி பிரியாணி, ஆம்லெட் விற்பனை நிலையம்.

(5) இந்தியா தேனீர் வாரியம் நடத்தும் தேனீர் அறை.

(6) தேசீய படித்த இளைஞர்களின் சுய வேலை வாய்ப்பு சங்கம் நடத்தும் சிற்றுண்டிச் சாலை.

(7) இரண்டு சிறிய தனியார் டீக் கடைகள்.

ஆக இப்படி ஏழு நிறுவனங்கள் நடக்கும்போது, அரசாங்கம் இதிலே தலையிட வேண்டிய அவசியமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விடுதியும், இங்கே நமது தலைமைச் செயலகத்திலே நடத்தப்படுகின்ற விடுதிகளும் தனியார்களுக்கு வாடகைகூட இல்லாமல் விடக்கூடிய சூழ்நிலையிலேகூட, அதிக மான கட்டணத்தை உணவுக்கு வசூலிக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டிலிருந்து அவைகளுக்கு வாடகை வசூலிக்கப்படுகின்றது. மற்றவற்றைப் பற்றி அமைச்சர் அவர்களை விசாரிக்கலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக விலை நிர்ணயிக்கப் படுவதாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், கோழி பிரியாணி ரூ. 3 என்றுதான் இதிலே பட்டியலிலே இருக்கிறது. ஆனால், அளவு சமபந்தப்பட்ட விவரங்கள் இங்கே இல்லை. உண்மை யிலேயே அதிக விலை இருக்குமானால் அதைப்பற்றி அரசு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியும், தலைமைச் செயலகத்திலே நடத்தப்பட்டு வரும் விடுதிகளுக்கும் நியமித்துள்ள ஒழுங்கு முறை விதிகள் என்ன என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய விதி முறைகளுக்கான விவரம் தற்போது இல்லை. ஒழுங்காக சாப்பாடு போட வேண்டுமென்பதுதான் விதியாக இருக்குமென்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் தற்போது சாப்பாடு எடுப்பதற்கு ஆறே ஆறு சாப்பாடு காரியர்கள்தான் இருக்கின்றன; ஆறே ஆறு பிளாஸ்குகள்தான் இருக்கின்றன. இவைகளும் 10 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. இதைத்தவிர, அங்கே ஜன்னல்களிலே இருக்கக்கூடிய கொக்கிகள் சரிவர இல்லை. இதைப்பற்றி 3, 4 முறைகள் நான் ஏற்கனவே இங்கே சொல்லி யிருக்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி சாப்பாடு விடுதியைப் பற்றியது. இந்த ஜன்னலுக்கு ரிப்பேர், கதவுக்கு ரிப்பேர் என்பதைப் பற்றி கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது தலைமைச் செயலகத்திலே தரமான உணவு கொடுக்கப்படுமா என்பதைப் பற்றிய கேள்வி. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே என்ன நிலைமை என்பதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால், அதைப்பற்றிய தகவலைச் சேகரித்து தரப் படும். தவிர, அவர்கள் அங்கே 6 கேரியர்கள்தான் இருக்கின்றன; அதுவும் மிகவும் பழமையாக இருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். நிச்சயமாக பேரவைத் தலைவர் அதை கவனத்தில் வைத்துக் கொண்டுள்ளார்.

அறநிலையத்துறைக்கென வாரியம்.

*வினா எண் 81—திரு. என். கிட்டப்பா: திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அறநிலையத்துறைக்கென தனியே வாரியம் ஒன்று அமைத் திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதற்கு, இதற்கு முன்னாலே காங்கிரஸ் கட்சி 'ஏரியா' கமிட்டி என்று போட் டிருந்தது. பின்னர் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது கலைக்கப்பட்டு, வேறு வகையான முறையில்